கந்தையா அருந்தவராஜா [(1)], கணேசலிங்கம் ஜெயதீஸ்வரன [(2)]

# ஆங்கிலேயராட்சிக்கால யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் - ஒரு வரலாற்றுப் பார்வை

(1) வரலாற்றுத்துறை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (மின்னஞ்சல்: **arunnmsu@gmail.com**)

(2) வரலாற்றுத்துறை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட பாரிய தாக்கங்களிலொன்று அவர்கள் இலங்கையின் பொருளாதாரத்துறையில் ஏற்படுத்திய புரட்சிகரமான மாற்றங்களாகும். 1796இல் இலங்கையின் கரையோரப்பகுதிகளைக் கைப்பற்றிப் பின்னர் 1815இல் கண்டியினையும் கைப்பற்றி தங்களது முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் இலங்கையினைக் கொண்டு வந்த ஆங்கிலேயர் போர்த்துக்கேயர் மற்றும் டச்சுக்காரரைப் போன்று வர்த்தகத்தினையோ அல்லது மதம் பரப்புதலையோ தங்களது பிரதான நோக்கங்களாகக் கொண்டு இலங்கையில் இயங்கவில்லை. அவர்களது பிரதான நோக்கமே நீண்டகாலத்திற்கு இலங்கையினைக் குடியேற்றமாக வைத்திருக்க வேண்டுமென்பதே.

வரலாற்றுக் காலங்களிலிருந்தே யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கை முழுவதும் விவசாயப் பொருளாதாரம் சார்ந்த நாடாகவே இருந்து வந்துள்ளது. அதுமட்டுமன்றி அயற் பிரதேசங்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட வர்த்தகத்தினையும் அது மேற்கொண்டிருந்தது. போர்த்துக்கேயராலும் சரி பின் வந்த டச்சுக்காரரினாலும் சரி இம்முறையில் முழுமையான மாற்றங்கள் எவற்றினையும் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் ஆங்கிலேயர் தொழிற்புரட்சியுடன் ஏற்பட்ட முதலாளித்துவம், சனநாயகம் என்பனவற்றினை நோக்கி முன்னேறியவர்களாக இலங்கையின் விவசாயப் பொருளாதாரத்தினைப் பணப்பயிர்களுக்கும் வர்த்தகப்பொருளாதாரத்திற்கும் ஏற்ற பொருளாதாரமாக மாற்றினர். தொடர்ந்து இறக்குமதி-ஏற்றுமதிப் பொருளாதார நாடாக இலங்கை மாறியது.

முதலாம் இரண்டாம் நிலை ஆதாரங்களைப் பயன்படுத்தி பொருளாதார மற்றும் வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல்நிலை ஆதாரங்களென்ற பிரிவிற்குள் ஆங்கிலேய அதிகாரிகளினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள், வெளியீடுகள், சமகாலப்பத்திரிகைகள் போன்றன அடங்குகின்றன. இரண்டாம் நிலை ஆதாரங்களில் பிற்பட்ட காலங்களில் முதல் நிலை ஆதாரங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், இவ்விடயந்தொடர்பாக ஆய்வினை மேற்கொண்ட அறிஞர்களை நேர்காணல் செய்தல் என்பன அடங்கியுள்ளன.

**பிரதான சொற்பதங்கள்** : கிராமிய விவசாயம், ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரம், பணப்பயிர்கள், சிறு கைத்தொழில் முயற்சிகள்

## அறிமுகம்

பல்லினச் சமூகத்தவர்கள் வாழ்ந்து வருகின்ற யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தவரை அங்கு காணப்பட்ட காலநிலை மற்றும் புவியியல் நிலமையின் காரணமாக மலையகப் பகுதிகள் போன்று தென்னை தவிர்ந்த தேயிலை, இறப்பர் போன்ற பெருந்தோட்டங்களை ஆங்கிலேயரால் நிறுவமுடியவில்லை. இருப்பினும் பெருந்தோட்ட ங்கள் (தேயிலை, இறப்பர்) அமைக்கப்பட்டதன் காரணமாக வர்த்தகச் செயற்பாடுகளின் பாதிப்பானது தமது பிரதேசத்திற்கு பொருத்தமான பிற பயிர்களில் யாழ்ப்பாணத்தவர்களுடைய கவனத்தினைச் செலுத்த வைத்ததெனலாம். இவர்கள் பாரம்பரிய பொருளாதாரத்தினைக் கைவிடாமலே புதிய வர்த்தகப் பொருளாதாரத்திற்கேற்ற வகையில் தம்மை மாற்றிக்கொண்டனரெனலாம். அதாவது நெற்செய்கையில் தங்கியிருந்த நிலையில் அவர்கள் பணப்பயிர்செய்கையிலும் வர்த்தக நோக்கத்தினைக் கொண்ட பயிர்களிலும் அக்கறை செலுத்த ஆரம்பித்தனர்.

## ஆய்வுமுறையியல்

ஆங்கிலேயரது ஆட்சியில் யாழ்ப்பாண மக்களது பொருளாதார நடவடிக்கைகளின் தன்மைகள், அவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள், போர்த்துக்கேயர், டச்சக்காரர் ஆட்சியில் காணப்பட்ட நிலைமையிலிருந்து எவ்வெவ் வழிகளில் மக்களின் பொருளாதாரநிலையானது வேறுபட்டிருந்தது?, யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலில் இத்தகைய புதிய பொருளாதார ஒழுங்குமுறைகள் ஏற்படுத்திய தாக்கங்கள் போன்ற பல விடயங்களை வரலாற்றுச்

சான்றுகளின் அடிப்படையில் வெளிக்கொண்டு வருவதனை இவ்வாய்வு தனது நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

## ஆய்வின் மையம்

### ஆங்கிலேயரால் யாழ்ப்பாணம் கைப்பற்றப்படல்

16ஆம் நூற்றாண்டானது இலங்கையின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக, கலை பண்பாட்டுத்துறைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்திய காலமாகக் கொள்ளப்படுகின்றது. அதாவது இக் காலப்பகுதியிலிருந்துதான் இலங்கையின் சகலதுறைகளிலும் ஐரோப்பியர்களின் செல்வாக்கு ஏற்பட ஆரம்பித்தது. போர்த்துக்கேயரும் அவர்களைத் தொடர்ந்து வந்த டச்சுக்காரரும் பின்வந்த ஆங்கிலேயரும் இலங்கையினைக் கைப்பற்றி ஏறத்தாள 400 வருடங்களுக்கு மேலாகத் தங்களது காலணித்துவ நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இவர்களுடைய சகல நடவடிக்கைகளும் இலங்கையரின் வாழ்வியலில் மாற்றங்கள் பலவற்றினை உண்டாக்கின.

ஐரோப்பிய ஆட்சியாளர்களில் இறுதியாக இலங்கை முழுவதனையும் தங்களது செல்வாக்கிற்கு உட்படுத்திய ஆங்கிலேயர் 1796இல் இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றிப் பின்னர் 1815இல் கண்டியினையினையும் கைப்பற்றி இலங்கை முழுவதனையும் தங்களது ஆளுகைக்கு உட்படுத்தினர்(Wilson 1982,p.2). போர்த்துக்கேயரும் டச்சுக்காரரும் கண்டியுடன் வர்த்தகத் தொடர்பகளைக் கொண்டிருந்தபோதும் கண்டியினை அவர்களால் நிரந்தரமாக அடிமைப்படுத்த முடியவில்லை. எனவே இலங்கையின் கரையோரப்பகுதிகளை 1795இன் நடுப்பகுதியிலிருந்து ஆங்கிலேயர் ஒவ்வொன்றாகக் கைப்பற்றி வர ஆரம்பித்த நிலையில் யாழ்ப்பாணமும் டச்சக்காரர்களின் குறைந்த எதிர்ப்புக்களின் மத்தியில் இறுதியாக ஆங்கிலேயரிடம் சரணடைந்தது(குணசிங்கம்,2008இ ப.282). இருப்பினும் இவ்வேளையில் வன்னிப்பிரதேசமும் வன்னி அரசனாக இருந்த பண்டாரவன்னியனும் ஆங்கிலேயரது ஆட்சிக்குப் பலத்த எதிர்ப்பினைக் காட்டினரென்பது குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கேயராட்சியில் யாழ்ப்பாண மன்னன் சங்கிலியின் ஆட்சிக்குப் பின்னதாக யாழ்ப்பாணம் சுதந்திரத்தினை இழந்திருந்தபோதும் வன்னிப் பெருநிலம் ஏதோ ஓருவகையில் தன்னுடைய எதிர்ப்பினை அக்காலத்திலிருந்து அன்னியராட்சிக்கு எதிராகக் காட்டிக்கொண்டே வந்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. போர்த்துக்கேயரும் டச்சக்காரரும் வன்னியிலிருந்து யானைகளைப் பெற்றதுடன் மட்டும் திருப்தி கொண்டனர(Wilson, 1982,p.2'). ஆனால் 1803இல் வன்னிப் பகுதியினையும் பண்டாரவன்னியனைத் தோற்கடித்ததன் மூலமாக ஆங்கிலேயர் அடிமைப்படுத்திக்கொண்டனர். தொடர்ந்து பலர் கைதுசெய்யப்பட்டு ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டனர். சொத்துகள் அழிக்கப்பட்டன. கண்டியும் கைப்பற்றப்பட்டதனைத் தொடர்ந்து நிர்வாகத்தின் செயற்திறனை அதிகரிப்பதன் பொருட்டு அதிகபட்சமான பொருளாதார, அரசியல் நலன்களைப் பெறுவதன் முகமாகச் சட்டம், ஒழுங்கு என்பனவற்றினைக்கொண்டதொரு ஆட்சியினை முழுமையாகச் செயற்படுத்த ஆங்கிலேயர் மத்திய மயமான நிர்வாகத்தினை இலங்கையில் ஏற்படுத்தினர(Queroz, 1930,P.51').

### யாழ்ப்பாண அரசர்கள்கால பொருளாதாரப் போக்கு

இலங்கையில் இடைக்காலப்பகுதியில் காணப்பட்ட இராச்சியங்களுலொன்றான யாழ்ப்பாண இராச்சியமானது ஏனைய இரு இராச்சியங்கள் போன்று (கோட்டை, கண்டி) தனித்துவம் பெற்ற நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட இராச்சியமாகக் காணப்பட்டது. இலங்கையின் வடபகுதியில் காணப்பட்ட இந்த இராச்சியமானது யாழ்ப்பாணக்குடாநாடு. அயலிலுள்ளதீவுகள், மன்னார் தொடக்கம் முல்லைத்தீவு வரையிலான பகுதிகளைத் தன்னகத்தே கொண்டதாகக் விளங்கியது(Rasanayagam, 1936,p.338). பெருமளவுக்குத் தமிழ்மக்கள் வாழ்ந்த பகுதிகளை உள்ளடக்கியதாக விளங்கிய இது ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்தில் பொருளாதார பலத்தில் உன்னதநிலையினை அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதாவது அரசியலிலும் சரி பொருளாதார பலத்திலும்சரி சிறப்பான இடத்தினை இது வகித்திருந்தது(பத்மநாதன். 2011, ப.140). அக்காலப்பகுதியில் பல்வேறு வழிகளிலிருந்து இது வருவாயினைப் பெற்றுக்கொண்டது.

நிலவரி, தலைவரி, திறைகள், துறைமுகங்கள், கடவைகளிலிருந்து கிடைக்கின்ற வருவாய், வயல்கள் மூலமான வருவாய்கள், யானை விற்பனையிலிருந்து கிடைக்கின்ற வருமானம், முத்துக்குளித்தல் போன்றவற்றினால் அரசுக்கு அதிகளவான வருவாய் கிடைத்தது. இவ்வாறு கிடைக்கின்ற வருவாய்களை வசூலிப்பதற்காக பல்வேறு அதிகாரிகளையும் அரசர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

மக்களும் மழைநிரை நம்பியே விவசாயத்தினை மேற்கொண்டு வந்தனர். இக்காலப்பகுதியில் மீனவத்தொழிலிலும் குறிப்பிட்ட பிரிவினர் ஈடுபட்டு வந்தனர். இவை தவிர பல்வேறு சிறிய கைத்தொழில் முயற்சிகளையும் யாழ்ப்பாண மக்கள் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது(Arunthavarajah, 2009,P.39). மேலும் இக்காலப்பகுதியில்

உள்நாட்டு வர்த்தகத்திலும் அக்கறைகாட்டிய இவர்கள் இந்தியா போன்ற பிறநாடுகளுடன் வெளிநாட்டு வர்த்தகத்திலும் ஈடுபட்டு வந்தனர். பொதுப்பட யாழ்ப்பாண அரசர்களது காலத்தில் மக்கள் சுதந்திரமான முறையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததுடன் தன்னிறைவு அடைந்த பொருளாதாரமாக யாழ்ப்பாணத்தின் பொருளாதார நடவடிக்கைகளும் அமைந்திருந்தன.

**போர்த்துக்கேயராட்சிக்கால பொருளாதாரப் போக்கு**

பொதுவாகவே ஐரோப்பியர்கள் இலங்கைமீது நாட்டம் கொண்டமைக்கு முக்கியமானகாரணி இங்கு விளைந்த நறுமணப்பொருட்களே. அதாவது போர்த்துக்கேயரும்ம்சரி அவர்களைத் தொடர்ந்து இலங்கைக்கு வந்த டச்சுக்காரரும்சரி இலங்கையின் கறுவா விளைச்சலால் கவரப்பட்டவர்களே. இருப்பினும் இவர்களது கறுவா வர்த்தக நடவடிக்கையானது கோட்டை மற்றும் கண்டி இராச்சியத்துக்குள்ளாகவே மட்டுப்படுத்தப் பட்டுக் காணப்பட்டது. ஆனால் யாழ்ப்பாண இராச்சியத்தினைப் பொறுத்தவரை இவர்களது வர்த்தகத்தினை உள்ளடக்கிய பொருளாதாரச் செயற்பாடானது வேறுவிதமாகவே அமைந்து கொண்டது(குணராசா, 2001, ப.46). போர்த்துக்கேயர் ஏற்கனவே யாழ்ப்பாணத்திலிருந்து வந்த நிர்வாகமுறை, பொருளாதாரக் கட்டமைப்புப் போன்றன அவர்களுக்கு ஏற்றவகையில் அமைந்திருந்தமையினால் அவற்றில் மாற்றங்கள் எவற்றினையும் ஏற்படுத்தவில்லை. அப்படியே அவற்றினைக் கைக்கொண்டனர்.

இலங்கையின் தென்பகுதியில் காணப்பட்டதனைப் போன்று கறுவா போன்ற நறுமணப்பொருட்கள் யாழ்ப்பாணத்தில் காணப்படாதபோதும் வடபகுதியில் மன்னாரின் கேந்திர முக்கியத்துவமானது அவர்களது இராணுவ மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளுக்கு அவசியமான வகையில் அமைந்திருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக வடபகுதி மன்னாரின் முத்துக்கள் போர்த்துக்கேயரைக் கவர்ந்திழுத்திருக்கு மென்பதில் எதுவிதமான சந்தேகமுமில்லை.

1619இல் பிலிப் டி. ஒலிவேறா (Filipe de Oliveira) என்பவனின் தலைமையில் போர்த்துக்கேயரால் யாழ்ப்பாணத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது யாழ்ப்பாணஇராச்சியம் முழுவதும் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டது. இந்துக்கோயில்கள் பல அழிக்கப்பட்டன. தொடர்ந்து 1621 யாழ்ப்பாணம் தன்னுடைய சுதந்திரத்தினை முற்றுமுழுதாகப் போர்த்துக்கேயர்களிடம் இழந்தது(பத்மநாதன், 2011,ப.156). பொதுவாகப் போர்த்துக்கேயரது அரசியல் நிர்வாகச்செயற்பாடுகளும் அவர்களது பொருளாதார நடவடிக்கைகளும் இலங்கையில் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட வகையிலேதான் அமைந்திருந்தன.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயரது முக்கியமான வருமான மூலங்களாக முத்துவர்த்தகம், யானைவர்த்தகம் மற்றும் காணிகள்மீதான வரிகள் போன்றன காணப்பட்டன. அதுமட்டுமன்றி உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களிலிருந்தும் இவர்கள் அதிகளவான வரிகளை அறவிட்டுக்கொண்டதன் மூலமாக வருமானங்களைப் பெற்றனர். இவர்களது வருமானங்களில் யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்து பெறப்பட்ட கப்பங்களும் அடங்கியிருந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து பெறப்பட்ட வருவாயின் மூலமாகவே அவர்களது அரச இயந்திரமானது இலங்கையில் பெருவளர்ச்சி கண்டதெனலாம். படையினர்கள், நிர்வாகப்பணியாளர்கள் மற்றும் கூலிப்படையினருக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து பெறப்பட்ட வருவாயில் சம்பளம் கொடுக்கப்பட்டது. மேலும் கோட்டைகள் கட்டுவதற்கும் மதப்பரப்புச் செயற்பாடுகளுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கிடைத்த வருவாயில் பெரும் பங்கு பயன்படுத்தப்பட்டதெனலாம். இதனைவிட யாழ்ப்பாணத்தரசர்களது நிலங்களும் ஏலத்தில் விடப்பட்டும் அவற்றிலிருந்து போர்த்துக்கேயரினால் அதிகளவில் வருவாய் பெறப்பட்டது(Anthonsz, 2003, P.72).

இக்காலப்பகுதியில் நெற்செய்கை, கிராமியப் பயிர்வகைகள் நெசவுத்தொழில் போன்றவற்றிலும் யாழ்ப்பாணத்திலிருந்த மக்கள் ஈடுபட்டனர். சிறிதளவு புகையிலையையும் செய்கை பண்ணினர். மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பொருட்களைக் கொண்டு சென்றும் பிறநாடுகளுக்குப் பொருட்களை அனுப்பியும் யாழ்ப்பாண மக்கள் வருவாயினைப் பெற்றுக்கொண்டனர். யாழ்ப்பாணத்தின் கரையோரங்களிலிருந்த மக்களில் அனேகர் மீனவத் தொழிலையும் மேற்கொண்டு வந்தனர். ஆனால் தனிப்பட்ட ரீதியால் யாழ்ப்பாண மக்கள் செய்து வந்த சிறிய பொருளாதார நடவடிக்கைகளுக்கும்கூடப் போர்த்துக்கேயர் கட்டுப்பாட்டினை விதித்தனர் அல்லது அவற்றினைத் தனியுரிமையாக்கினர். பொதுவாகப் பார்க்குமிடத்துப் போர்த்துக்கேயரின் பொருளாதார நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்து மக்களின் பொருளாதாரத்தினை வெகுவாகப் பாதித்ததுடன் அவர்களது பொருளாதாரத்தினையும் சுரண்டியது. மேலும் அவர்களில் சிலரை இடம்பெயரவும் செய்திருந்தது.

**ஒல்லாந்தராட்சிக்கால பொருளாதாரப் போக்கு**

1656இல் கொழும்பினைப் போர்த்துக்கேயரிடமிருந்து தங்களது கட்டுப்பாட்டின் கீழ் டச்சுக்காரர் கொண்டு வந்ததனைத் தொடர்ந்து 1658இல்

மன்னாரையும் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றுகின்ற நோக்கத்துடன் வான்கோன்ஸ் (Van Goens) தலைமையில் பெரும்படையுடன் புறப்பட்டு முதலில் மன்னாரையும் பின்னர் யாழ்ப்பாணத்தினையும் தங்களது ஆளுகையின்கீழ் முழுமையாகக் கொண்டு வந்தனர். இதனைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கையின் கரையோரப்பகுதிகள் யாவற்றிலும் டச்சுக்காரரது செல்வாக்கு நிலைநிறுத்தப்பட்டதெனலாம(Arunthavarajah, 2009,p.35). போர்த்துக்கேயரைப் போன்று மன்னாரில் விளைந்த முத்துக்களும் வன்னி மற்றும் யாழ்ப்பாணத்தின் யானை வர்த்தகமும் டச்சுக்காரரையும் இலங்கையின் வடக்குநோக்கி நகரவைத்தமைக்கு அடிப்படையான காரணங்களாக இருந்திருக்கலாமென்பதில் இருவேறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை.

பொதுவாக டச்சுக்காரரின் கீழைத்தேய கைப்பற்றல்களின் முக்கியமான நோக்கம் வர்த்தக பொருளாதார நடவடிக்கைகளும் அவற்றினுடாக இயலுமானளவு செல்வத்தினைச் சேகரித்துக்கொள்வதுமாகும். இத்தகைய தங்களது நோக்கத்தினை அடைவதற்கு அவர்கள் முதலில் மேற்கொண்ட வழியானது இலங்கையின் வர்த்தகத்தில் தாமே ஏகபோக உரிமை கொண்டவர்களெனத் தங்களைப் பிரகடனப்படுத்தியமையாகும்(பத்மநாதன், 2001, ப.70). இதன்காரணமாக தனிப்பட்ட வகையில் வர்த்தக நடவடிக்கைகளில் எவராலும் ஈடுபடமுடியவில்லை.

அக்காலப்பகுதியில் காணி முகாமைத்தவ மென்பது டச்சுக்காரரின் பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அம்சங்களி லொன்றாகக் அமைந்திருந்தது. 18ஆம் நூற்றாண்டிலே இதுவே இவர்களது அரசகொள்கையின் பிரதான அம்சமாகக் காணப்பட்டதுடன் அவர்களுக்குத் தொடர்ச்சியான பிரச்சினையினைக் கொடுத்தவந்த விடயமாகவும் அமைந்தது.

வர்த்தகத்திலும் ஈடுபட்ட டச்சக்காரர்கள் அதன் மூலமாக இங்கிருந்து பெருமளவிலான வருவாயினைப் பெற்றுக்கொண்டனர். கறுவா, எலம், மிளகு, பாக்கு, யானை, இரத்தினக்கற்கள் முதலியன அவர்கள் இலங்கையில் வர்த்தகத்திலீடுபட்ட முக்கியமான சில பொருட்களாகும். யானை வர்த்தகம், முத்துக்குளித்தல் போன்றன அவர்கள் இலங்கையிலிருந்து பெற்றுக்கொண்ட முக்கியமான வருவாய் மூலங்களாக அமைந்த (Pieris,1995,p.27). யாழ்ப்பாணத்திலிருந்த பனைமரங்களை கேரளமாநிலம், நாகபட்டினம் போன்ற பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்தனர (குணசிங்கம்,2008, ப.272). அந்தவகையில் இவர்களும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக நடவடிக்கைகளில் இறங்கினர்.

யாழ்ப்பாணமக்களின் பொருளாதாரமானது முழுக்க முழுக்க விவசாயத்திலேதான் தங்கியிருந்தது. நெல் தவிர எள்ளு, பயறு, கடலை, உழுந்து, புகையிலை போன்றனவற்றினைப் பயிற்செய்கின்ற பழக்கமும் அவர்களிடையிலே காணப்பட்டது. இவர்கள் மாற்றுப் பயிற்செய்கை முறைகள், நிலங்களுக்கு பசளையிடுதல் போன்றவற்றினை நீண்டகாலமாக அறிந்திருது வைத்திருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது (Silva,1981,p.239). செம்மண் காணப்பட்ட பகுதிகளிலே காய்கறிவகைகள், கிழங்குவகைகள் வாழை, பலா, கமுகு, வெற்றிலை போன்றனவும் பயிர்செய்யப்பட்டன. சில பகுதிகளில் பதநீர் சேகரிக்கப்பட்டு பனைவெல்லம் தயாரிக்கப்பட்டது. அரிசி மற்றும் உணவுப்பொருட்கள் போதாமையாக இருந்தமையின் காரணமாக தென்னிந்தியாவிலிருந்து இவை இறக்குமதி செய்யப்பட்டன. இவற்றினைவிட நெசவுக்கைத்தொழில் போன்ற சிறிய கைத்தொழில்களிலும் யாழ்ப்பாண மக்கள் ஈடுபட்டு வந்தனர். எவ்வாறாயினும் போர்த்துக்கேயரது காலத்தினைப் போலவே டச்சுக்காரரது காலத்திலும் யாழ்ப்பாணமக்கள் பொருளாதார நடவடிக்கைகள் பொறுத்துத் தமது சுதந்திரத்தினை இழந்தவர்களாகவே விளங்கினர்.

## ஆங்கிலேயராட்சிக்கால பொருளாதாரம்

போர்த்துக்கேயர் மற்றும் டச்சக்காரர் இலங்கை வந்த சமயத்தில் ஐரோப்பாவில் இருந்த நிலமையிலிருந்து ஆங்கிலேயரின் இலங்கை வருகையின்போது ஐரோப்பாவில் காணப்பட்ட நிலமை வேறுபட்டிருந்தது. அதாவது இத்தருணத்தில் இங்கிலாந்து கைத்தொழிற்புரட்சியின் தாக்கங்களை அனுபவித்துக்கொண்டிருந்தது. இந்நாடு முதலாளித்துவ வல்லரசாக நிலை பெறுவதற்கான வளர்ச்சிகள் இவ்வேளையில் பூர்த்தியடைந்திருந்தன. எனவே இவ்வாறான தொரு சூழ்நிலையிலேதான் ஆங்கிலேயர் இலங்கைக்குள் நுழைந்தனர். இவர்களும் இலங்கை வந்த ஆரம்பகாலப்பகுதியில் மக்களைத் துன்பறுத்திப் பல்வேறு வகையான வரிகளை விதித்து அவற்றின் மூலமாக மக்களிடமிருந்து வருவாயினைப் பெற்று வந்தனர். இதனை எதிர்த்து மக்களும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வந்தனரென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலேயர் இலங்கை வந்த காலப்பகுதியில் ஏனைய ஐரோப்பியர்களது ஆட்சியில் காணப்பட்டதுபோன்று கறுவாதான் இலங்கையின் காலணித்துவ நிதிக்கான அடிப்படையாகக் காணப்பட்டது (Silva,1981,P.239). ஆனால் ஆங்கிலேயரின் வளர்ச்சியடைந்து வந்த முதலாளித்துவச் சிந்தனையுடனும் அதனை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நடவடிக்கைகளுடனும் இது ஒத்துப்போகவில்லை. இத்தகையதொரு பின்னணியில் இலங்கையில் 1833 இல்

பரிந்துரைக்கப்பட்ட கோல்புறூக் அரசியற் திட்டம் முதலாளித்தவத்திற்குச் சார்பானதொரு முறையிலே நாட்டின் பொருளாதாரம் முகாமை செய்யப்பட்ட வேண்டியதன் அவசியத்தினை எடுத்துரைத்திருந்தது. தொடர்ந்து உற்பத்தியினை ஆதாரமாகக்கொண்ட, ஏற்றுமதி வர்த்தகத்தினை அடிப்படையாகக்கொண்ட ஏற்றுமதி வர்த்தகத்தினை ஆங்கிலேயர் ஆரம்பித்தனர்.

ஆங்கிலேயரது ஆட்சியில் இலங்கையில் பல வருடங்களாக நிலவிய குடிசைப் பொருளாதாரமுறைமை, சுய உற்பத்தியி லமைந்த பொருளாதார முறைமை என்பனவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன. பாரம்பரியமாகக் காணப்பட்டு வந்த விவசாயப் பொருளாதாரமானது பணப்பயிர்களுக்கும் வர்த்தகப் பொருளாதாரத்திற்கும் மாற்றப்பட்டது. கோப்பி, தேயிலை, இறப்பர், தென்னை போன்ற பெருந்தோட்ட வர்த்தகப் பயிர்களை உற்பத்திசெய்து அவற்றினை ஏற்றுமதி செய்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்கின்ற ஏற்றமதி இறக்குமதிப் பொருளாதாரம் இலங்கையில் உருவானது. (குணசிங்கம்,2008,ப.272).

ஆனால் தமிழர்கள் அதிகளவில் செறிந்து வாழ்ந்த யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கையின் வடபகுதியில் காணப்பட்ட புவியியல்நிலை, காலநிலை போன்றவற்றின் தன்மை காரணமாக தென்னை தவிர்ந்த பிற பயிர்களை அங்கே உற்பத்தி செய்ய முடியவில்லை. இதனால் இலங்கையின் ஏனைய பகுதிகளைப் போன்று யாழ்ப்பாணப் பிரதேசம் இத்தகைய மாற்றங்களினால் பெருமளவில் பாதிக்கப்படவில்லை. இருப்பினும் பெருந்தோட்ட வர்த்தகச் செயற்பாடுகளின் பாதிப்பு யாழ்ப்பாணத்தவர்களைத் தமது பிரதேசத்திற்குப் பொருத்தமான பயிர்களைச் செய்வதற்குத் தூண்டியது. யாழ்ப்பாணத்தவர்கள் செய்தது போன்று இலங்கையின் வன்னி மற்றும் கிழக்குப் பகுதியிலிருந்த மக்கள் செய்யவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம் அங்கு காணப்பட்ட குறைந்தளவிலான சனத்தொகையையும் அதிகமான நிலப்பரப்பினையும் கொண்டிருந்த அப்பகுதி மக்கள் பாரம்பரிய விவசாயமுயற்சிகளிலீடுபட்டு வந்தமையே (Silva,1981,PP241-261). மேலும் இப்பிரதேசங்களில் இதற்கு முற்பட்ட காலங்களிலும் போர்த்துக்கேயர் மற்றும் டச்சுக்காரர் ஆகிய மேற்குலகத்தவர்களின் செல்வாக்கு குறைவாகவே இருந்து வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயரும் தமது பணத்தினையும் நேரத்தினையும் இப்பகுதியிலுள்ள சிறியதொகையினரான மக்களுக்குச் செலவிட விரும்பவில்லை.

யாழ்ப்பாணப் பிரதேசமானது இலங்கையின் கிழக்குப் பகுதிபோன்று நிலம், நீர்ப்பாசன வசதிகள் போன்றனவற்றினை அதிகளவில் கொண்ட பிரதெசமாகக் காணப்படவில்லை. இங்கே மழைவீழ்ச்சியும் குறைவாக இருந்த அதேநேரத்தில் சனச்செறிவும் அதிகமாக இருந்தது. இருப்பினும் இங்கு காணப்பட்ட அமைதியான சூழ்நிலை காரணமாக மக்கள் தமது பொருளாதாரத்தினை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த முன்வந்தனர். கோல்புறுக் சிபார்சுகளின் விளைவாக தனியார்துறை ஊக்கவிக்கப்பட்டு அரசாங்கத்தின் ஏகபோக உரிமை ஒழிக்கப்பட்டது. (Arasaratnam,1994,P.45). தொடர்ந்து இராஜகாரியமுறையினையும் (ஊதியமின்றி வேலை செய்தல்) இது முடிவுக்குக் கொண்டு வந்தது. எனவே இதுவரையில்லாத சுதந்திரத்தினை இவருடைய சிபார்சுகள் தொழிற்சந்தையில் உண்டாக்கியது. இத்தகையதொரு பின்னணியில் பதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வர்த்தகப் பொருளாதாரமுறையினால் யாழ்ப்பாணத்தில் நெற்செய்கையின் முக்கியத்துவம் படிப்படியாகக் குறைந்து வந்தது.

## நெற்செய்கை வீழ்ச்சி

யாழ்ப்பாண மக்கள் தமது வருமானத்தினை அதிகரிக்கும் பொருட்டு நெற்பயிற்செய்கையில் தங்கியிருப்பது குறைவடைந்து பணப்பயிர்களிலும் வர்த்தக நோக்கத்தினைக் கொண்ட தோட்டச் செய்கையிலும் ஈடுபட ஆரம்பித்தனர். உள்ளூரில் அரிசியில் அதிகமான அளவு இறக்கமதி செய்யவேண்டியதொரு சூழ்நிலையேற்பட்டது. மேலும் அரிசியினை இறக்கமதி செய்வது மலிவானதாகவும் காணப்பட்டதனால் அரசாங்கமும் அரிசி இறக்குமதியில் நாட்டத்தினைச் செலுத்தியது. (Nithiyanandam,2003,P.92). பணப்பயிர் உற்பத்தி அதிகரித்தமையினால் ஏற்றுமதிச் சந்தைகள் முக்கியத்துவம் பெறலாயின.

## புகையிலைச்செய்கை

இத்தகையதொரு பின்னணியில் இலங்கையில் யாழ்ப்பாணத்தரசர்களின் காலந்தொடக்கம் யாழ்ப்பாண மக்களால் செய்கை பண்ணப்பட்டு வந்த புகையிலைச் செய்கையினை விரிவாக்கஞ் செய்கின்ற நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தவர்களினால் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணத்தில் புகையிலைச் செய்கைக்கான பொருத்தமான நிலப்பரப்பு ஏறக்குறைய முற்றாகவே புகையிலைச் செய்கையின் பொருட்டுப் பயன்படுத்தப்பட்டது(ஈழகேசரி). இந்தியச் சந்தையில் இதற்கான தேவை அதிகரித்திருந்த நிலையில் யாழ்ப்பாணத்தவர்களுக்கு புகையிலையினை அங்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பக்கள் அதிகரித்தன. குறிப்பாக இந்தியாவின் திருவாங்கூருக்கு யாழ்ப்பாணத்தவர்களினால் ஏராளமான புகையிலை அனுப்பப்பட்டது. இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்தும்

கேரளாவிற்குப் புகையிலை அனுப்பட்டபோதும் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படுகின்ற புகையிலைக்கு நல்ல மதிப்பிருந்தது. இப்புகையிலை வியாபாரம் அக்காலப்பகுதியில் மலையாளப் புகையிலை வியாபாரம் என அழைக்கப்பட்டது. (Nithiyanandam, 2003,P.92). 1851இல் 10000 ஏக்கர் நிலப்பரப்பில் இச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து பல தரகர் கம்பனிகள் தோன்றி இங்கிருந்த புகையிலையினைப் பிற நாடுகளுக்கு அனுப்புகின்ற பொறுப்பினை ஏற்றுக்கொண்டன. தேயிலை, இறப்பர் தோட்டங்கள் கண்டிப் பிரதேசங்களில் எவ்வளவு முக்கியத்துவத்தினைப் பெற்றிருந்ததோ அதேபோன்றளவு முக்கியத்துவத்தினை ஆங்கிலேயராட்சிக்காலம் முடிந்ததன் பின்னராகவும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் புகையிலையின் உற்பத்தி வர்த்தக நடவடிக்கைகள் பெற்றிருந்தன.

புகையிலையுடன் வெங்காயம், மிளகாய், காய்கறிவகைகள், நிலக்கடலை, தென்னை போன்றவற்றின் செய்கையும் விரிவடைந்தது. இதன் மூலமாக விவசாயிகள் தங்களது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தினர்.

### நிலம்

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சனத்தொகை அதிகரித்துக்கொண்டு வந்த சூழ்நிலையில் பயிர்செய்கைக்கேற்ற நிலங்கள் பல மக்களது வாழ்விடங்களாக மாற்றப்பட்டு வந்தன. யாழ்ப்பாணப் பிரதேசத்தினைப் பொறுத்தவரை விவசாய நடவடிக்கைகளும் மக்களது வசிப்பிடங்களும் ஒன்றுடனொன்று இணைந்த வகையில்தான் காணப்பட்டிருந்தது. அது மட்டுமன்றி நிலமே மிகவும் பெறுமதியானதொரு வர்த்தகப் பொருளாகவும் விளங்கியிருந்தது. மக்கள் நெருக்கமாக வாழ்ந்த பிரதேசங்களில் நிலத்தினுடைய பெறுமதி அதிகரித்து வந்தது. அந்தவகையில் நிலத்தின் சந்தையொன்று வளர்வதற்கான சூழல் உண்டானது. (குணசிங்கம்,2008,ப.290). இக்காலப்பகுதியில் நிலஉடமை என்பதும் நிலத்தினை அடிப்படையாகக்கொண்ட கொடுக்கல் வாங்கல்களும் வேளாளர்களுடைய கைகளிலேதான் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மரவர்த்தகம்

பாரம்பரிய பொருளாதார வளங்களும்கூட முக்கியத்துவம் பெற்று விளங்கி யாழ்ப்பாண மக்களிடையிலே பணப்புழக்கத்தினை அதிகரிக்கச் செய்தது. அந்தவகையில் மரவியாபாரமென்பது நல்ல வருவாயினைக் கொடுத்த மூலகமாக ஆங்கிலேயரது அட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தவர்கள் பொறுத்துக் காணப்பட்டது. தரமான பனை மரங்களின் உள்ளூர்ப் பாவனை என்பது மிகவும் குறைந்த அளவிலேயே காணப்பட்டிருந்தது. உள்ளூர் மக்களான இவர்கள் தரங்குறைந்த மரங்களையே அதிகளவில் பயன்படுத்தி வந்தனர். தரமான பனை மரங்களை இவர்கள் இந்தியா, மொரிஷியஸ், சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தனர். (குணசிங்கம்,2008,ப.290) 1850களில் 35,000 ஏக்கர் நிலப்பரப்பில் பனைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் காணப்பட்டதுடன் வருடாந்தம் 600,000 பனைமரக்குற்றிகள் ஏற்றுமதியும் செய்யப்பட்டன. இவற்றில் ஏறத்தாள அரைப்பங்கிற்குமதிகமானவை இந்தியாவிற்கே அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது (Arasaratnam,1978,PP.377-392). மேலும் காட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களான சாயப்பட்டை, பலாப்பழ வற்றல், வேலம்பட்டை என்பனவற்றுடன் கருங்காலி, முதிரை, பாலை போன்ற மரங்களும்கூட இந்தியா போன்ற நாடுகளுக்கு ஏற்றமதி செய்யப்பட்டன.

மரவியாபாரத்தின் மூலம் பெருவருமானம் கிடைத்துவந்ததன் காரணத்தால் உள்ளூர்த் தேவைக்காகவும் ஏற்றுமதிக்காகவும் ஏராளமான மரங்கள் தறிக்கப்பட்டு வந்தன. இதனை அவதானித்த பிரித்தானிய அரசு மரந்தறிப்பதற்கு அனுமதிபெறும் முறையை அறிமுகப்படுத்தியது. அதன்படி மரந்தறிப்பதற்கு முன் மாவட்ட வருமான அதிகாரியிடம் வைப்புப்பணம் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெறவேண்டியிருந்தது. அவ்வைப்புப் பணம் மரத்தின் பெறுமதி அதற்கான ஏற்றுமதி மற்றும் ஏனைய செலவுகள் என்பவற்றை கருத்தில் கொண்டு ஓர் உரிமைப்பங்காக அறவிடப்பட்டு வந்தது. இந்நடைமுறை வழக்கத்தில் இருந்தபோதும் பல இடங்களில் அனுமதி பெறாமல் களவாக மரம்தறிக்கும் நிலை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனினும் பிரித்தானிய அரசு மரம் தறிப்பதற்கு அனுமதி பெறும் நடைமுறையை அறிமுகப்படுத்தியதன் மூலம் வருமானம் பெற்றுவந்ததைக் காணலாம்.

### வாழை

நெற்செய்கையினை ஆங்கிலேயர்கள் புறக்கணித்தமை போன்றே அவர்களது காலத்தில் புறக்கணிக்கப்பட்ட மற்றொரு பயிர்வகை வாழையாகும். வெப்பவலயத் தன்மை கொண்ட நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற பழங்களுள் வாழைப்பழ ஏற்றுமதி முக்கியமானது. இலகுவாக வளரக் கூடிய பயிராகவும் இது காணப்படுகின்றது. அந்தவகையில் யாழ்ப்பாணம் இதற்குப் பெயர் பெற்றிருந்த பிரதேசமாகக் காணப்பட்டது. பல ரகங்களையும் இவர்களால் சந்தைகளுக்கு அனுப்பக் கூடியதாகவும் இருந்தது. ஆனால் ஆங்கிலேய அரசாங்கம் இதில் அக்கறை காட்டவில்லை. யாழ்ப்பாணத்தில் பெருந்தோட்டங்கள் என்ற பிரிற்குள் இவ்வாறு பல பயிர்கள் உள்ளடங்கக் கூடிய நிலையில் இருந்தபோதும் ஆங்கில அரசாங்கம் இவற்றில் அக்கறை காட்டவில்லை.

**பல்வேறு தொழில்கள்**

ஆங்கிலேயரது ஆட்சியின் ஆரம்பகாலம் வரை யானை வர்த்தகம் சிறப்பாக நடைபெற்ற வந்தது. நெசவுத்தொழில், சாயமிடுதல், மட்பாண்டம், பாய்மரம் கட்டுதல், கூடை பின்னுதல் சுருட்டுத் தொழில், செங்கல் சுடுதல், தச்சுத்தொழில், தங்கம் மற்றும் இரும்பத் தொழில்கள் என்பனவும் நடைபெற்றன. இத்தொழில்களுள் தையல், நெசவு, சாயமிடுதல் என்பன பிரபல்யம் பெற்ற தொழில்களாக விளங்கின. இக்காலத்தில் இலாப நோக்குடன் ஆடை உற்பத்தியை வளர்க்கும் வகையில் பருத்திச்செய்கை அரசினால் ஊக்குவிக்கப்பட்டது. இதற்கு காரணம் இறக்குமதிக்கு ஏற்படும் செலவை குறைப்பதற்கேயாகும். இந்தியாவிலிருந்து துணிகள் இறக்குமதி செய்யப்பட்டுப் பின்னர் சாயமிடப்பட்டு இந்தியாவிற்கும் பிற நாடுகளுக்கும் அனுப்பப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் தையல் மற்றும் நெசவுத் தொழிலின்மூலம் அக்காலத்தில் பெருமளவு வருமானம் கிடைத்து வந்ததனால் தையல் தொழிலில் யாழ்ப்பாணப் பெண்கள் பலர் ஈடுபட்டு வந்தனர். அத்துடன் யாழ்ப்பாண மகளீர் "யாழ்ப்பாண மாதர் தையல் வேலைச்சங்கம்" என்ற அமைப்பை உருவாக்கி தையல் தொழிலை முன்னெடுத்து வந்தனர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இங்கு மேற்கொள்ளப்பட்டு வந்த பாரம்பரிய தொழில்கள் அனைத்துமே சாதியை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வந்தன. ஆனால் பிரித்தானியரது பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்ட மாற்றத்தின் மூலம் எல்லாச் சாதியினரும் பல தொழில்களிலும் ஈடுபடும் நிலை உருவாகி வந்தது. கல்வி கற்றவர்களுக்கு அரசாங்கத்தில் உத்தியோகங்கள் கிடைத்தன.

**மீனவத் தொழில்**

யாழ்ப்பாணத்தவர்களுக்கு வருமானத்தினை வழங்கி வந்த மற்றொரு முக்கியமான தொழில் மீனவத்தொழிலே. இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்கள் மீன்பிடித்தலுக்கேற்றதொரு நீண்ட கடற்கரைப் பிரதேசத்தினைக் கொண்டிருந்தது. இதன் காரணமாகவே யாழ்ப்பாணத்தரசர் காலந்தொடக்கமே யாழ்ப்பாணத்தின் கடற்கரையினை அண்டிய பிரதேச மக்கள் தொடர்ந்து மீனவத்தொழிலை மேற்கொண்டு வந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன. இவர்கள் வேளாளர் எனப்பட்ட சமூகப்பிரிவிற்குள் அடங்காது அவர்களுக்குப் போட்டியாக இருந்து வந்துள்ளனர். இதற்கு முக்கியமான காரணம் இத்தொழிலின் மூலமாகக் கிடைத்த வருவாயே. ஐரோப்பியர்களும் மதம் மாற்றத்தின் பின்னணியில் இவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கியமையின் காரணமாக இச்சமூகத்தவர்களின் அந்தஸ்தும் உயர்வடைந்திருந்தது.

மீன் பிடித்தல் மட்டுமன்றி அதனுடன் இணைந்த தொழில்களான வலை பின்னுதல், கப்பல் கட்டுதல் போன்ற பல தொழில்களிலும் ஈடுபட்ட இவர்கள் இவற்றின் மூலமாக தங்களது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்திக்கொண்டனர். இத்தொழில்களில் ஈடுபட்டவர்களில் பலர் தென்னிந்தியாவுடன் தொடர்புகளைப் பெருமளவில் கொண்டிருந்தமையின் பின்னணியில் ஏனைய பிறதொழில்களை மேற்கொள்பவர்களுக்கும் சந்தை வாய்ப்புக்களை இவர்கள் செய்துகொடுத்தனரெனலாம். குறிப்பாகப் புகையிலை வியாபாரத்திலீடுபட்டவர்களுக்கு இத்தகைய உதவிகள் கிடைத்தன.

வர்த்தகப் பயிர்செய்கை, ஏற்றுமதிகள், பல்வேறு தொழில்கள் போன்றவற்றின் மூலமாக யாழ்ப்பாணத்தவர்கள் பெருமளவு செல்வத்தினை ஈட்டினர். இவர்களில் பலர் செல்வந்தராகினர். இதற்கும் மேலாக நிலஉடமையாளர், விதானைகள், முதலியார், உடையார் போன்றவர்கள் செல்வத்திலும் செல்வாக்கிலும் உன்னத நிலையினை அடைந்தனர். இவர்கள் தம்வசமிருந்த நிலம் மற்றும் உடமைகள் போன்றவற்றுடன் அரசாங்க உத்தியோகத்தில் இணைந்து அதில் கிடைக்கும் ஊதியம் மூலமும் வருமானம் பெற்றுவந்ததன் காரணத்தால் சமூகத்தில் செல்வாக்கு மிக்கவர்களாகக் காணப்பட்டனர். இதனால் யாழ்ப்பாணத்தமிழரின் பொருளாதார நிலை உயர்ந்தது. நிலத்தின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்தது. நிலஉடமையாளரான வேளாளர் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தினைப் பெற்றனர். அதேநேரத்தில் சமுதாயத்தில் கீழ்மட்டத்திலிருந்தவர்களுடைய பொருளாதாரம் சீர்குலைந்தது. இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். தொடர்ந்து நிலங்களற்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். பொருளாதார நிலையில் கீழ்நிலையடைந்த மக்கள் தொழிற்துறையில் பிரவேசிக்க முடியாமல்போக கூலிக்கு வேலை செய்யும் நிலைக்கு ஆளாயினர். எனவே வர்த்தகப் பயிற்செய்கையின் அறிமுகமானது யாழ்ப்பாண மக்களுடைய பாரம்பரிய பொருளாதாரத்தில் பாதிப்பினை உண்டாக்கியதுடன் நிலஉடமையாளரின் பொருளாதர நிலையினை உயர்த்தி யாழ்ப்பாண மக்களிடையிலே உயர்மட்டப் வகுப்புத் தோன்ற இது காரணமாகியதெனலாம்.

**வரிக்கொள்கை**

பிரித்தானியர் வகுத்திருந்த பொருளாதாரக் கொள்கையில் வரிமுறையானது அவர்களுக்கு வருமானம் ஈட்டும் ஓர் வழிமுறையாகக் காணப்பட்டது. அந்தவகையில் யாழ்ப்பாணத்திலும் அவர்கள் பின்பற்றிய வரிமுறையினூடாக பெருமளவு வருமானத்தை ஈட்டிவந்தனர். கோல்புறூக் பிரித்தானியஅரசின் பொருளாதார நலன்கருதி அரசின் தனியுரிமைகளையும் தடைகளையும் நீக்கிய அதேவேளை வருமானத்தை அதிகரிக்கும்

வகையில் தானியம், அரிசி, பருத்திப்பொருள், ஆகியன மீது ஏற்றுமதி வரியை ஏற்படுத்தினார். முடிக்குரிய காணிவிற்பனை, நெல்லினால் கிடைக்கும் நிலவருமானம், உலர்தானியம், மரவிற்பனை வருமானம் என்பன மீதும் வரிகள் விதிக்கப்பட்டன. இவற்றுடன் கலால் வரிகளும் முத்திரைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. மற்றைய நேரடி வரியாக தலைவரி மட்டுமே இருந்தது. தலைக்கு ஒரு ரூபாய் ஐம்பது சதம் முதல் இரண்டு ரூபாய் வரை எல்லா ஆண்களும் வருடாந்தம் வீதிகள் அமைப்பதற்காகச் செலுத்தினர். இத்தலைவரி பண்டைக்காலத்திலிருந்து பின்பற்றப்பட்டுவந்த இராஜகாரிய முறைக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் பிரித்தானிய அரசாங்கம் வரி மூலம் பெற்ற வருமானத்தின் ஒருபகுதியை மக்கள் நலத்திட்டங்களான வீதி அமைப்பு, வைத்திய சேவைகள் போன்ற பிறதேவைகளுக்கும் பயன்படுத்தி வந்தது. இதனால் யாழ் மக்களது வாழ்வியலில் சில வசதிவாய்ப்புக்கள் ஏற்பட்டு வந்ததைக் காணலாம்.

## நிறைவுரை

ஐரோப்பியரான ஆங்கிலேயரின் ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மாற்றங்களில் பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் சிறப்பானவை. போர்த்துக்கேயர் அவர்களைத் தொடர்ந்து வந்த டச்சுக்காரர் ஆகியோர்களைவிட கைத்தொழிற்புரட்சியின் பண்புகளுடன் முதலாளித்துவத்தின் எழுச்சியுடன் இவர்கள் இலங்கை வந்ததன் காரணத்தினால் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் அடிப்படையான மாற்றங்கள் பலவற்றினை உண்டாக்கினர். பணப்பயிர்ச் செய்கையின் முக்கியத்துவம் அதிகரித்தது. இருப்பினும் பாரம்பரிய விவசாயத்தினை யாழ்ப்பாணத்தவர் முற்றாகக் கைவிட்டனரென்றும் கூறிவிட முடியாது. இப்பயிர்கள் ஏதோ ஒரு மூலையில் யாழ்ப்பாணக் கிராமங்களில் செய்கை பண்ணப்பட்டு வந்ததென்பதனையும் மறுக்க முடியாது. பல்வேறு தொழில்கள் வளர்ச்சி கண்டன. யாழ்ப்பாணத்தவர் பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளில் முன்னேற்றமடைந்திருந்தனர்.

## References


1. Anthonisz, R.G.,2003. *The Dutch in Ceylon*,New Delhi: , *Asian Educational Services*
2. Arasaratnam,S.,1978."Social History of a Dominant Caste Society: the Velalar of North Ceylon in the 18th Century, *Indian Economic and Social History Review*, Vol 18.
3. Arasaratnam,S.,1994. "Sri Lankan Tamils Under Colonial Rule" , in Sri Lankan Tamils: *Ethnicity and Identity*, ed.by managar,C & Pfaffenberger ,Colombo: Westview Press.
4. Arunthavarajah, K.,2009. *The Indo – Lanka Relations (1931 – 1972),* Doctor of Philosophy, Tamil Nadu: (not published) Manoonmaniam Sundaranar University.
5. Nithiyanandam,V.,2003. *Economic History of Sri Lanka*,New Zealand: Messey University.
6. Oueyroz, Fernao de.,1930, *The Temporal and Spiritual Conquest of Ceylon,* Colombo: Trans.Perera,S.G.
7. Pieris,P.E.,1995. *Ceylon and the Hollanders 1658 – 1796* ,New Delhi : Navrang.
8. Rasanayagam,C.,1926. *Ancient Jaffna* .Madras.
9. Silva,K.M.de.,1981. *A History of Sri Lanka* ,oxford: Oxford University press.
10. Wilson,A,J., 1982. *The Break-Up of Sri lanka : The Sinhalese Tamil Conflict* ,London: C.Hurst&Co.
11. ஈழகேசரி,1930-1958, சுன்னாகம்:திருமகள் அழுத்தகம்.
12. குணசிங்கம்,முருகர்., 2008. *இலங்கையில் தமிழர் - ஒரு முழுமையான வரலாறு* , சிட்னி:எம்.வி.வெளியீடு.
13. குணராசா, க.,2001. *யாழ்ப்பாண வைபவமாலை – ஒரு மீள்வாசிப்பு*, யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம்.
14. பத்மநாதன், சி.,2001. *இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும்* ,கொழும்பு: குமரன் வெளியீடு.

15. பத்மநாதன், சி.,2011.
*யாழ்ப்பாணஇராச்சியம்* ,கொழும்பு: குமரன்
புத்தக இல்லம்.